بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *26.06.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### Summary of the Friday Sermon - 26 June 2015 (Tamil)

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் வாயளவில் கூறுவதோடு மட்டும் இருந்து விடக்கூடாது. இது அசல் நோக்கமல்ல. நஃப்ஸை தூய்மைப்படுத்துவதும், சீர்திருத்தமும் அவசியமாகும். இதற்காகவே அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான்.

எனவே அவர்கள் ஜமாஅத்தில் செயல் அளவிலான மாற்றம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகின்றார்கள். வெறும் வாயளவில் பேசுவதோடு மட்டும் நமது செயல்கள் ஒரு எல்லைக்குட்பட்டதாக இருந்து விடக்கூடாது என்று அவர்கள் கூறுவதன் கருத்து, பேசுவது மட்டும் போதாது என்பதாகும். தனது சுய இலாபத்தை பார்க்கின்ற போது தமது பேச்சை மாற்றிக் கொள்வதும் கூடாது. அப்படிப்பட்ட தருணத்தில் நமது நல்லொழுக்கத்தின் தரத்தை நிலைநாட்ட முடியாமலும் நாம் இருந்து விடக்கூடாது. மாறாக, நம்பிக்கை கொள்வதும், அல்லாஹ் கூறுகின்ற விஷயங்களை செயல்படுத்துவது, நமது நஃப்ஸை சீர்திருத்துவது, அதை எப்போதும் தூய்மையாக வைத்திருப்பது ஆகியவற்றை நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் தான் அவர்களிடம் பைஅத் செய்ததற்கான உரிமை செலுத்தப்பட முடியும். இந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் அவர்களை அனுப்பினான். அவர்களிடம் செய்த பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் நமது பார்வை இருக்க வேண்டும். அவற்றிற்கேற்ப செயல்பட வேண்டியது அவசியமாகும் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் திருப்தி நம்முன்னால் இருக்க வேண்டும் என்பதையும் எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த குத்பாவில் நான் இவ்வாறு கூறியிருந்தேன். அதாவது அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சியை பார்க்க வேண்டுமென்றால் فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ எனது கட்டளைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொள்வது என்றால் என்ன ? நம்முடைய எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் கட்டகளைகளின்படி செயல்படுவதாகும். மேலும் தமது வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப கழிப்பதாகும். எனவே, ரமலானின் இந்த குறிப்பான சூழலில் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை எந்த அளவு நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆக்குகின்றோம் என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இது இல்லையென்றால், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றுக் கொள்கின்றோம் என்ற நமது வாதம் வெறும் வாயளவிலான வாதமாகவே இருக்கும். அல்லாஹ் திருக்குர்ஆனில் பல கட்டளைகளை வழங்கியுள்ளான். இந்த கட்டளைகளை நம் முன்னால் நாம் எப்போதும் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் நஃப்ஸை சீர்திருத்துவதன் பக்கம் நமது கவனம் இருக்க வேண்டும். அல்லாஹ் வழங்கியுள்ள கட்டளைகளிலிருந்து சில விஷயங்களை இப்போது நான் எடுத்துக் கூறுவேன். அவை நமது நஃப்ஸை சீர்திருத்துவதற்கு காரணமாக இருப்பதுடன் மட்டுமல்லாமல் அவை சமுதாயத்திலும் அன்பு, நேசம் மற்றும் அமைதியின் சூழலை ஏற்படுத்துகின்றது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். அதாவது அளவற்ற அருளாளனான இறைவனின் உண்மையான அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள் ஆவர். அவர்கள் மிகவும் மென்மையாகவும், கண்ணியமாகவும் நடப்பவராவர். அவர்கள் அகங்காரம் கொள்வதில்லை. அறிவற்றவர்கள் அவர்களுடன் பேசினால் அவர்கள் சண்டையிடுவதில்லை. மாறாக, நாங்கள் உங்களுக்காக சாந்தி கிடைக்க வேண்டும் என்ற துஆவையே செய்கின்றோம் என்று கூறுவர் (25:64).

எனவே, சுருக்கமாக இங்கு அந்த மகத்தான நல்லொழுக்க மற்றும் ஆன்மீக புரட்சியின் வரைபடம் நமக்கு காட்டப்பட்டுள்ளது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய புரட்சியாகும். அவர்களை ஏற்றுக் கொண்ட அன்னாரது ஸஹாபாக்கள் இந்த நல்லொழுக்கத்தை தங்களிடம் ஏற்படுத்தினார்கள். அந்த காலம் உலகம் இருளில் மூழ்கியிருந்த காலமாக இருந்தது. உலகம் ஷைத்தானின் பிடியில் சிக்கியிருந்தது. தான் என்ற அகந்தை, சுயநலம், கர்வம் மற்றும் குழப்பங்கள் உலகை அழிவின் குழியில் தூக்கி எறிந்திருந்தது. அந்த சமயத்தில் மனிதர்களுக்கு உயர்வான நல்லொழுக்கம், பணிவு, தாழ்மை குணம் ஆகியவற்றைப் பற்றி மட்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதிக்கவில்லை. மாறாக, இந்த வசனத்தின் செயல்வடிவமாக திகழ்ந்த அத்தகைய மனிதர்களை அவர்கள் உருவாக்கி இருந்தார்கள். இன்றும் உலகின் நிலை இப்படித்தான் இருக்கின்றது. இந்த காலத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரை அனுப்பி வைத்து ரஹ்மானின் அடியார்களின் ஒரு ஜமாஅத்தை அவர்கள் மூலமாக இறைவன் உருவாக்கினான். அவர்களுடைய ஜமாஅத்துடன் தங்களை தொடர்புபடுத்தி கூறுகின்ற ஒவ்வொருவரும் இந்த தரத்தை தங்கள் கண் முன்னால் வைக்க வேண்டும். ரஹ்மானின் அடியார்கள் தொடர்பாக இந்த வசனத்தில் அல்லாஹ் கூறியிருப்பது போன்று یَمۡشُوۡنَ عَلَی الۡاَرۡضِ ہَوۡنًا அதாவது அவர்கள் பூமியில் பணிவுடனும், கண்ணித்துடனும், கர்வம் கொள்ளாமலும் நடப்பவராவர் என்று

கூறியதற்கேற்ப ஒரு உண்மையான ரஹ்மானின் அடியார் இவ்விஷயங்களை கவனத்திற் கொண்டிருக்க வேண்டும். ரமலானில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இந்த நற்செய்தியை நமக்கு வழங்கியுள்ளான். அதாவது இந்த மாதத்தில் நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன என்று அன்னார் கூறினார்கள். அல்லாஹ்வும் அடியார்களுக்கு மிக அருகில் வந்து விடுகின்றான். அல்லாஹ் எல்லா நேரமும், எல்லா இடங்களிலும் இருந்து கொண்டு இருக்கின்றான். அல்லாஹ் கீழ் வானத்தில் இறங்கி வருகின்றான் என்பதன் கருத்து, அல்லாஹ் நாம் செய்யும் நன்மைகளுக்கு அதை விட அதிகமாக நற்கூலியை வழங்குகின்றான் என்பதாகும். மேலும் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றான்.

எனவே, ஈமான் கொள்வதாக வாதம் செய்கின்ற ஒவ்வொருவரும், ஒவ்வொரு அஹ்மதியும் ரஹ்மானின் அடியாராக ஆவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரிடம் பைஅத் செய்திருக்கும் ஒவ்வொருவரும் தங்களை ஆய்வு செய்தவாறு பணிவை கடைபிடித்து, அகங்காரத்தை முடிவிற்கு கொண்டு வந்து தமது சமுதாயத்திலும், தமது வீட்டிலும், தமது சுற்றுச் சூழலிலும், சண்டைகளையும், குழப்பங்களையும் முடிவிற்கு கொண்டு வர முயற்சி செய்தவாறு அமைதியையும், சாந்தியையும் பரப்ப வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக தமது முன்மாதிரியை நம் முன்னால் நிலைநாட்டிச் சென்றுள்ளார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் இது பற்றி போதனையும் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அல்லாஹ் என்னிடம் இவ்வாறு கூறியுள்ளான். நீங்கள் எந்த அளவு பணிவை மேற்கொள்ள வேண்டுமென்றால், எவரும் யார் மீதும் பெருமை கொள்ள வேண்டாம்.

ஒரு முறை ஒரு யூதர் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இருக்கும் சிறப்பை நிரூபிக்க முயற்சி செய்தார். அதைக் கேட்ட ஒரு முஸ்லிம் மிகவும் கடுமையாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது அந்தஸ்து தான் எல்லோரையும் விட உயர்வானதாக இருக்கின்றது என்று கூறினார். இதைக் கேட்ட அந்த யூதர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து இதனால் எனது மனம் புண்படுகின்றது என்று கூறினார். அப்போது எல்லா நபிமார்களது தலைவரான பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு மூஸா (அலை) அவர்களை விட எந்த சிறப்பினையும் வழங்க வேண்டாம் என்று கூறினார்கள். சமுதாயத்தில் அமைதி நிலவுதற்கான அந்த மகத்தான முன்மாதிரி இதுவேயாகும். அமைதி, சமாதானம், சாந்தி ஆகியவற்றின் அரசராக திகழ்பவர் மீது குற்றச்சாட்டுகளை கூறுபவர்களுக்கும் இதுவே பதிலாக இருக்கின்றது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் காரணமாக உலகில் அமைதி அழிந்து விட்டதாக கூறுகின்றனர். பெருமானார் (ஸல்) அவர்களது பெயரில் அநீதியான முறையிலும், காட்டுமிராண்டித்தனமாகவும் தாக்குதல்களை நடத்துபவர்களுக்கும் இதில் படிப்பினை இருக்கின்றது. ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருப்பதாக வாதம் செய்கின்ற நமக்கு இப்போது இந்த செயல் ரீதியிலான உலகில் இந்த குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றவர்களின் குற்றச்சாட்டுகளை மறுக்கின்ற பொறுப்பு இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு போதனை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். நான் எனது ஜமாஅத்திற்கு போதனை செய்கின்றேன். நீங்கள் தற்பெருமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தற்பெருமை நமது கம்பீரமிக்க இறைவனின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். எந்த நபர் தனது சகோதரர் கூறும் விஷயத்தை தாழ்மையுடன் கேட்க விரும்புவதில்லையோ மேலும் அவரிடமிருந்து முகம் திருப்பி செல்கின்றாரோ அவரும் தற்பெருமையில் பங்கு பெறுகின்றார். கர்வத்தின் எந்த பகுதியும் உங்களிடம் இல்லாமல் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அதன் மூலமாக நீங்கள் அழிந்து போகாமல் இருக்க வேண்டும். அதன் மூலம் நீங்கள் உங்களது மனைவி மக்களுடன் இரட்சிப்பை பெற்றுக் கொள்வீர்கள். இறைவன் பக்கம் குனியுங்கள். உலகில் ஒரு மனிதர் மீது எந்த அளவு நேசம் வைப்பது சாத்தியமாக இருக்கின்றதோ அந்த அளவு நீங்கள் இறைவன் மீது நேசம் வையுங்கள். அதாவது உலகில் ஒரு மனிதன் ஒருவர் மீது எந்த அளவு நேசம் வைக்க முடியுமோ அந்த அளவு நீங்கள் அந்த இறைவன் மீது நேசம் வையுங்கள். ஒரு மனிதன் உலகில் ஒருவருக்கு எந்த அளவுக்கு அஞ்ச முடியுமோ அந்த அளவுக்கு நீங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள். தூய உள்ளம் கொண்டவர்களாக மாறி விடுங்கள். உங்கள் மீது கருணை காட்டப்படுவதற்காக நீங்கள் தூய எண்ணம் கொண்டவராகவும், ஏழ்மையை கடைப்பிப்பவராகவும் மாறி விடுங்கள்.

ஆக, இத்தகைய நிலைமையை தான் நம்மில் ஒவ்வொருவரும் நம்மிடம் உருவாக்க வேண்டும். இந்த நாட்களில் இதற்காக முயற்சி செய்வதுடன் எல்லா வகையான அகங்காரத்தையும் அழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். சாந்தியை பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்காக துஆக்களின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். தனது சொந்த விருப்பங்களை மட்டும் இறைவன் முன்னால் எடுத்துக் கூறுவதை இறைவன் விரும்புவதில்லை. ஏதாவதொரு ஒரு நோக்கத்திற்காக மட்டும் இறைவனிடம் வரக்கூடாது. மாறாக, களப்பற்ற மனத்தூய்மையுடன் எப்போதும் அவன் முன்னால் குனிய வேண்டும். தனது சொந்த விருப்பங்களை அவன் முன் எடுத்து வைக்கக்கூடாது. மாறாக, களப்பற்ற மனத்தூய்மையுடன் அவன் முன்னால் குனிய வேண்டும். எவர் அவ்வாறு குனிவாறோ அவருக்கு எந்த துன்பமும் ஏற்படாது. மாறாக, அந்த துன்பத்திலிருந்து வெளியேறுவதற்கான வழி அவருக்கு கிடைத்து விடும். இதைப்பற்றி அல்லாஹ்வே இவ்வாறு கூறுகின்றான்.

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு ரிஸ்க்கை வழங்குவான் **(65:3,4)** என்று கூறுகின்றான். இந்த இடத்தில் ரிஸ்க் என்பதன் கருத்து, உணவு மட்டுமல்ல. கண்ணியம், அறிவு போன்ற எவையெல்லாம் மனிதனுக்கு தேவைப்படுகின்றதோ அது இந்த சொல்லில் அடங்கும். இறைவனுடன் எவர் ஒரு அணு அளவு தொடர்பு வைப்பாரோ அவர் ஒருபோதும் வீணாக மாட்டார். எனவே, நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நமது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதவற்கும் இந்த நாட்களை அல்லாஹ் நமக்கு தந்துள்ளான். இந்நாட்களில் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். எந்தெந்த விஷயங்களில் நமக்கு தற்பெருமை இருக்கின்றதோ அல்லது எந்தெந்த விஷயங்கள் நமது பணிவையும், தாழ்மை குணத்தையும் வளர்ச்சி அடையச் செய்வதில் தடையாக இருக்கின்றனவோ அல்லது நமது சுற்றுச்சூழலில் எந்த விஷயங்கள் நம் மூலமாக அமைதியின்மையை ஏற்படுத்த காரணமாக இருக்கின்றதோ அவற்றை இறைவன் முன் குனிந்தவாறு அவனிடம் உதவி கேட்டவாறு அவற்றிலிருந்து விலகுவதற்கு

முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலமாக நமது இருப்பு எல்லா இடங்களிலும் சாந்தியை பரப்புகின்ற இருப்பாக இருக்க வேண்டும். அதற்கெதிரில் அமைதியின்மை மற்றும் குழப்பத்தை பரப்பக்கூடியதாக அது இருக்கக்கூடாது. அல்லாஹ் பிறரது உரிமைகளை செலுத்துவதற்கும், சாந்தியை பரப்புவதில் விரிவான நிலையை ஏற்படுத்துவதற்கும், கர்வத்திலிருந்து தப்பிப்பதற்கும் இன்னொரு இடத்தில் இந்த சொற்களில் நமக்கு கட்டளையிடுகின்றான்.

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோர்களுடன் (மிக்க) நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் நெருங்கிய உறவினர்களுடனும், அநாதைகளுடனும், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும், உங்களிடனிருப்பவர்களுடனும், வழிப்போக்கர்களுடனும், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். கருவங்கொண்டோரையும், பெருமையடிப்போரையும் அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை **(4:37)** என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இந்த வசனத்தில் இறைவனை வணங்கும்படி கூறிவிட்டு அவனுக்கு இணை வைப்பதிலிருந்தும் தடுத்த பிறகு சில உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ரமலான் எங்கு இறைவணக்கத்தின் பக்கம் கவனமூட்டுகின்ற மாதமாக இருக்கின்றதோ அங்கு சமுதாயத்திலுள்ளவர்களது உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனமூட்டக்கூடிய மாதமாகவும் அது இருக்கின்றது. எனவே, இந்த நாட்களில் இந்த உரிமைகளை செலுத்துவதும் ஒரு நம்பிக்கையாளர் மீது கடமையாகும். உண்மையில் இந்த உரிமைகளை எப்போதும் நாம் நிறைவேற்றி வர வேண்டும். ஆனால், இந்த மாதம் எத்தகையது என்றால் இதில் நாம் அதற்கான பழக்கத்தை ஏற்படுத்த முடியும். இந்த உரிமைகளை நாம் நிறைவேற்றாமல் இருந்தால் வெறும் இறைவணக்கங்களால் மட்டும் ரமலான் மூலமாக நாம் அடைய வேண்டிய குறிக்கோளை அடைய முடியாமல் போய் விடும். உண்மையான குறிக்கோள் என்னவென்றால் எந்தத் தூய மாற்றத்தை நாம் நம்மிடம் ஏற்படுத்துகின்றோமோ அதை நமது வாழ்வின் ஒரு பகுதியாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒன்று இறை வணக்கங்களாகும். அவற்றை இந்த மாதங்களில் நாம் நிறைவேற்றும் போது அது நிரந்தரமாக நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆகிவிட வேண்டும். மற்றொன்று உரிமைகளை செலுத்துவதாகும். அவற்றின் பக்கம் இந்த மாதத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு அவை நிரந்தரமாக நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆகிவிட வேண்டும். எனவே தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஒரு அறிவிப்பில் வருகிறது. அவர்கள் இறை அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்காகவும், ஏழைகளுக்கு உதவி செய்வதற்காகவும் இந்த நாட்களில் தமது கைகளை எந்த அளவு விரித்து வைத்திருந்தார்கள் என்றால் அவர்களது வள்ளல் தன்மை வேகமான புயல் காற்றை விட அதிகமாக இருந்தது என்று அறிவிப்பில் வருகின்றது. பொதுவான நிலைமைகளில் கூட அவர்களது வள்ளல் தன்மையின் தரம் எந்த அளவு உயர்ந்ததாக இருந்ததென்றால் வேறு எவரும் அந்த தரத்தை அடையவே முடியாது. பிறகு ரமலானில் அவர்களது ஈகை குணத்திற்கு உதாரணமாக வேகமான புயல் காற்றைத் தவிர வேறு எந்தவொரு உதாரணத்தையும் கூற முடியாது. எந்நிலையிலும் தேவை உடையவர்களின் தேவையை நிறைவேற்றுவதில் மிகவும் உயர்ந்த நல்லுதாரணத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள்.

எனவே, அல்லாஹ் இறைவணக்கம் செய்கின்ற ஒவ்வொருவரிடமும் இந்த உயர்வான நல்லொழுக்கங்களை எதிர்பார்க்கின்றான். அவற்றை பற்றி அவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். இவற்றை பணிவை கடைபிடித்தவாறு ஒரு நம்பிக்கையாளர் நிறைவேற்ற வேண்டும். உரிமைகளை செலுத்துவது ஒரு மிகப்பெரும் விஷயமாகும் என்று எவரும் கருதி விட வேண்டாம். உரிமைகளை செலுத்துவது பெருமைக்குரிய விஷயமல்ல. மாறாக, அது ஒவ்வொரு நம்பிக்கையாளரின் மீதும் கடமையாக இருக்கின்றது. இந்த உரிமைகளை செலுத்துவதன் மூலமாகத்தான் இறைவணக்கங்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. இந்த வசனத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று இந்த உரிமைகளில் பெற்றோர்களுக்குரிய உரிமை இருக்கின்றது. உறவினர்களுக்கான உரிமை இருக்கின்றது. அநாதைகளுக்கான உரிமை இருக்கின்றது. ஏழைகளுக்கான உரிமை இருக்கின்றது. உறவினர்களான மிக அருகில் இருக்கின்ற அண்டை வீட்டுக்காரர்களுக்கான உரிமை இருக்கின்றது. அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்களது உரிமை இருக்கின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்மோடு இருப்பவர்கள், நம்மோடு அமர்பவர்கள் ஆகியோரது உரிமைகள் இருக்கின்றன. பயணிகளுக்கான உரிமை இருக்கின்றது. நம்மை சார்ந்திருக்கின்ற நமக்கு கீழே இருப்பவர்களது உரிமை இருக்கின்றது.

சுருக்கமாக, இந்த வசனத்தில் மனித இனத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர்களது உரிமைகள் அனைத்தையும் எடுத்துக் கூறி அவற்றை செலுத்துமாறு நமக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. பெற்றோர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் பற்றி திருக்குர்ஆனில் மற்ற இடங்களிலும் வந்துள்ளது. அவர்களுக்கு தொண்டு செய்வதும், அவர்களை கருத்தில் கொள்வதும் சந்ததிகளின் கடமையாக இருக்கின்றது. இது பெற்றோர்கள் மீது அவர்கள் செய்கின்ற உபகாரம் அல்ல. பிறகு உறவினர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் இருக்கின்றன. இந்த விஷயத்தில் கணவனும், மனைவியும் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரது உறவினர்களுக்குரிய உரிமைகளை செலுத்தி வர வேண்டும். இது தொடர்பாக உங்களது இரத்த உறவுகளை நீங்கள் பேணுங்கள் என்ற இறைவனது கட்டளையும் இருக்கின்றது. இந்த கட்டளையை நாம் பேணி நடந்தால் பல சண்டைகளும் முடிவிற்கு வந்து விடும். அன்பு மற்றும் நேசத்தின் சூழல் ஏற்படும். எந்தெந்த வீடுகளில் இத்தகைய சண்டை சச்சரவுகள் இருக்கின்றதோ அதைப் பற்றி இந்த நாட்களில் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய பல விவகாரங்களும் நம்முன் வருகின்றது. அது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தற்பெருமை கொள்வது மற்றும் பிடிவாதமாக இருப்பது ஆகியவற்றிற்கு பகரமாக தங்களது குடும்பங்களை சீராக வைத்திருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அனாதைகளை கவனத்தில் கொள்வதும் ஒரு மிகப்பெரிய கடமையாகும். அவர்களை சமுதாயத்திற்கு பயன் தரக்கூடியவர்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள் என்றால், நானும் அனாதைகளை பராமரிப்பவர்களும் சொர்க்கத்தில் இவ்வாறு ஒன்றாக இருப்போம் என்று கூறி அவர்கள் தமது இரு விரல்களையும் ஒன்றாக இணைத்துக் காட்டினார்கள். அதாவது அத்தகையவர் நமக்கு மிகவும் அருகில் இருப்பார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த

முக்கியத்துவத்தை ஜமாஅத்திலுள்ள நபர்கள் எப்போதும் தமது கண் முன்னால் வைத்திருக்க வேண்டும். அனாதைகளை பராமரிப்பதற்காக பணம் செலவு செய்ய வேண்டும். ஜமாஅத் அளவிலும் இதற்கான ஏற்பாடு இருக்கின்றது. தேவை உடையவர்கள் மற்றும் ஏழைகளுக்கான உரிமைகள் இருக்கின்றன. இதில் கல்விக்கான செலவுகள் இருக்கின்றன. சிகிச்சைக்கான செலவுகள் மற்றும் திருமணத்திற்கான செலவுகள் இருக்கின்றன. ஜமாஅத்தில் இந்த எல்லா செலவீனங்களையும் நிறைவேற்றுவதற்காக தனியாக ஃபண்ட்ஸும் உள்ளன. அவற்றிற்காகவும் வசதி படைத்தவர்கள் ஜமாஅத் அமைப்பின் கீழ் இருந்தவாறு செலவு செய்ய வேண்டும்.

பிறகு அல்லாஹ் உறவினர்கள் மற்றும் அருகிலுள்ள அண்டை வீட்டுக்காரர்களின் உரிமையையும் செலுத்தும்படி கூறுகின்றான். இதில் நெருங்கிய உறவினர்களாக இருக்கின்ற அண்டை வீட்டுக்காரர்களும் வந்து விடுவர். அவ்வாறே எவர்களுடன் உங்களுக்கு நல்ல தொடர்புகள் இருக்கின்றதோ அவர்களுக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும். அவ்வாறே நீங்கள் அறியாத உங்களது அண்டை வீட்டுக்காரர்களையும் கருத்தில் கொள்ளுங்கள் என்றும் அல்லாஹ் கூறுகின்றான். இதில் உங்களுக்கு அருகில் இல்லாமல் மிக தூரத்திலுள்ள அண்டை வீட்டுக்காரர்களும் அடங்குவர். உங்களுடன் நல்ல தொடர்பு இல்லாத அண்டை வீட்டுக்காரர்களும் இதில் அடங்குவர். இவர்கள் அனைவரது உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். அன்பையும், நேசத்தையும் பரப்புகின்ற அழகிய போதனையாக இது இருக்கின்றது. இது சமுதாயத்தில் சாந்தி மற்றும் சமாதானத்தின் அடித்தளத்தை நிறுவுகின்றது. சுற்றுச்சூழலில் அமைதியையும், சாந்தியையும் உருவாக்குகின்றது.

பிறகு நம்முடன் அமர்பவர்கள் மற்றும் பயணிகளுக்கான உரிமைகள் இருக்கின்றன. இந்த வசனத்திலுள்ள சொற்களின் மூலமாக கணவன், மனைவி செலுத்த வேண்டிய உரிமைகளையும், நண்பர்களுக்குள்ள உரிமைகளையும் இறைவன் எடுத்துக் கூறியுள்ளான். நம்முடன் பணியாற்றுபவர்களின் உரிமைகள், அதிகாரிகள் மற்றும் அவர்களுக்கு கீழே பணிபுரிபவர்களுக்கு இடையிலுள்ள உரிமைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பிறகு وما ملكت ايمانكم. அதாவது உங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் என்று கூறி உங்களுக்கு கீழுள்ள, உங்களது தேவையின் கீழ் இருக்கின்ற ஒவ்வொருவரது உரிமையை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. இந்த எல்லா உரிமைகளையும் செலுத்த வேண்டும் என்று கூறிய பிறகு இந்த உரிமைகளை நீங்கள் செலுத்தாமல் இருந்தால் உங்களிடம் தற்பெருமையும், அகங்காரமும் இருக்கின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான். அது இறைவனுக்கு மிகவும் விருப்பமில்லாததாகும்.

இது இஸ்லாத்தின் அழகிய போதனையாகும். அமைதியை நிலைநாட்டுவதற்கும், சாந்தியை பரப்புவதற்கும் எல்லா மட்டத்திலுள்ளவர்களது உரிமையை நிறைவேற்றுவதற்குமுள்ள அழகிய போதனையாக இது இருக்கின்றது. ஆக, நமக்கு கிடைத்திருக்கும் இந்த நாட்கள் இறைவனுக்கு அருகில் நம்மை கொண்டு செல்லக்கூடிய நாட்களாக இருக்கின்றது. இறைவன் தானே நமக்கு அருகில் வருகின்றான். எவர்கள் இறைவனுக்குரிய உரிமையையும், இறைவனை வணங்குவதற்குரிய உரிமையையும், இறைவனின் அடியார்களது உரிமையையும் வழங்குகின்றனரோ அவர்களுக்கு இறைவனும் வழங்க விரும்புகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். வானத்தில் இறைவன் உங்களிடம் திருப்தியடைய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நீங்கள் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த இரு சகோதரர்கள் போன்று ஆகிவிடுங்கள். உங்களுக்கு கீழுள்ளவர்கள் மீதும், உங்களது மனைவிமார்கள் மீதும், உங்களது ஏழையான சகோதரர்கள் மீதும் கருணை காட்டுங்கள். அப்போது தான் விண்ணிலிருந்து உங்கள் மீதும் கருணை காட்டப்படும். நீங்கள் அவனுக்காக ஆகிவிடுங்கள். அதன் மூலம் அவனும் உங்களுக்காக ஆகிவிடுவான்.

பிறகு ஓரிடத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். எவர் ஒருவர் தமது வாழ்நாளை அதிகரிக்கும்படி செய்ய விரும்புகின்றாரோ அவர் நன்மையான காரியங்களை செய்வதில் முனைப்பாக செயல்பட வேண்டும். இறைவனது படைப்பினங்களுக்கு பயன்தரக்கூடியவராக இருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை செலுத்துவதுடன் இறை அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. மேலும் நாம் உண்மையான முறையில் ரஹ்மானாகிய இறைவனின் அடியார்களாக ஆவோமாக. மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தை இந்த ரமலானில் முன்பை விட அதிகமாக பெறக்கூடியவர்களாக ஆவோமாக. பிறகு அவற்றை நிரந்தரமாக நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்பவர்களாக நாம் ஆவோமாக.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். முதலவாது ஜனாஸா, காதியானைச் சார்ந்த தர்வேஷான மதிப்பிற்குரிய மர்ஹூம் உமர் அஹ்மது சாஹிப் காலா அஃப் கானா அவர்களது மனைவியான ஹிதாயத் பீ.பீ சாஹிபா உடையதாகும். இவர் சில நாட்கள் உடல்நலமின்றி இருந்த பிறகு 4 ஜூன் 2015 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டவாது ஜனாஸா காயிப், ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்த ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் முன்னால் ஆசிரியரான மதிப்பிற்குரிய மவ்லவி மஹ்மூத் அஹ்மது சாகிப் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 18 மே 2015 ல் மிகக் குறைந்த காலகட்டம் நோய்வாய்ப்பட்டிருந்த பிறகு வஃபாத் ஆகிவிட்டார்கள். தமது 98 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். மேலும் ஹுஸூர் அவர்கள் இவர்களது நன்மைகளை எடுத்துக்கூறினார்கள். மேலும் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவர்களது பாவங்களை மன்னித்து இவர் மீது கருணை காட்டுவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh, London – on 26.06.2015
Tamil Translation : Moulavi. M. Rafeek Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath, Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516